2018 ஜூன் 28]

முற்பகல் 11–25

திரு. துரைமுருகன்: *எங்கள் ஊர்க்காரர்தான் அவர். நான் அவரிடம் சொல்லிவிடுகிறேன். அதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. நான், உங்களிடம் கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன்.* I want to request you one thing, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. அதைப்பற்றிப் பேச வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அந்தக் கோயில் குறித்துப் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

திரு. துரைமுருகன்: *வேலூர் மாவட்டத்திற்கு பல விளையாட்டுத் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எங்கே அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டால், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இருக்கிறது; அதையொட்டி விளையாட்டரங்கத்தை அமைத்தால்தான், திருவள்ளுவர் பல்கலைக்கழகமும் வளரும், விளையாட்டுகளும் வளர்ச்சியடையும். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதோடு போதும். நன்றி.*

4. தகவல் கோரல்

(அ) மருத்துவப் படிப்புகளில் வெளி மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சேர்க்கை மற்றும் 'நீட்' தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரும் மசோதாக்களுக்கு விரைவில் அனுமதி பெற உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NEET *தேர்வின் காரணமாக, ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுடைய எதிர்காலக் கனவு அவர்களெல்லாம் மருத்துவர்களாக வர வேண்டும் என்ற அந்தக் கனவு சிதைக்கப்பட்டு, இனி வரக்கூடிய காலங்களில் போதிய மருத்துவர்கள் கிராமங்களில் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடும் என்ற ஓர் அச்சம் எல்லோருக்குமே ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், அந்த அளவிற்கு மாநிலத்தினுடைய கல்வி உரிமையை சிறிதும் மதிக்காமல், அதை மீறி, சர்வாதிகார ரீதியில் புறக்கணித்து,*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜூன் 28

மத்திய அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த NEET தேர்வு, இன்றைக்கு மாணவியருடைய உயிரை மட்டுமல்ல; அவர்களைத் தேர்வு எழுதுவதற்காக அழைத்துச் சென்ற பெற்றோர்களையும் காவு கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். கேள்வித்தாளில் இருக்கக்கூடிய பிழைகள், அதில் இருக்கக்கூடிய குழப்பம்; தேர்வு மையங்கள் குறித்தும் குழப்பம் இருக்கிறது. NEET தேர்வு முடிவுகள் வெளி வந்ததற்குப் பிறகு, இருப்பிடச் சான்று என்று தொடக்கத்திலிருந்தே குழப்பம் நிலவிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் அதனால் மனஅழுத்தத்திற்கு ஆளாகி, பாதிப்புக்குள்ளாகி, ஆதிக்க சக்திகளால் சமூகநீதிக்கு ஒரு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக, ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களைச் சார்ந்திருக்கக்கூடிய மாணவர்கள், தமிழ்நாட்டில் இருப்பதாக இருப்பிடச் சான்று பெற்றுக்கொண்டு, இப்போது மருத்துவக் கல்லூரிகளில் சேரக்கூடிய ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்ற ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு தொடர்ந்து சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இருப்பிடச் சான்று பெறுகின்ற விஷயத்தில் கடந்த ஆண்டில் நடைபெற்ற மோசடிகளைப் போல அல்லாமல், அதைத் தவிர்க்க இந்த ஆண்டு இருப்பிடச் சான்று பெறுவது குறித்து புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், மற்ற மாநிலத்தவர்கள், எப்படியோ, யாருடைய துணையோடோ, ஏதோ சதி செய்து இங்கு வந்து சேர்ந்து விடுகின்றனர் என்கிற ஒரு குற்றச்சாட்டும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், NEET தேர்வுக்கு இதே அவையில் கடந்த 1–2–2017 அன்று இரண்டு மசோதாக்கள், அதுவும் ஒருமனதாக, அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து ஏற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, அவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. நான் கேட்கிற கேள்வி என்னவென்றால், NEET தேர்வு குறித்த மசோதாக்களினுடைய கதி என்னவென்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை. அந்த மசோதாக்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டனவா என்பதும் புரியவில்லை. NEET தேர்வு குறித்த மசோதாக்கள் குடியரசுத் தலைவர் அலுவலகத்திற்கு வரவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.கே. ரங்கராஜன் அவர்களுக்கு ஒரு கடிதமும் வந்திருக்கிறது. அதுகுறித்தும் வெளியில் செய்தி வந்திருக்கிறது. எனவே, தமிழக அரசு மத்திய அரசுக்குத்

2018 ஜூன் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

தீவிர அழுத்தம் கொடுத்து, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த மசோதாக்களின்மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? மௌனம் சாதிப்பதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில், இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்த மசோதாக்களுக்கு மத்திய அரசு மதிப்பளிக்க மறுத்து, அவற்றை அப்படியே, இன்றைக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கிலே, cold storage–ல் போட்டு மூடிவைத்து, கூட்டாட்சித் தத்துவத்திற்கே ஒரு கேலிக் கூத்தான நிலையை உருவாக்கி இருக்கிறது.

ஆகவே, நான் இந்த அவையின் மூலமாக, தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புவது, NEET தேர்வு குறித்த மசோதாக்களின் தற்போதைய நிலை என்ன என்பதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கிட வேண்டும். ஒருவேளை மத்திய அரசு அந்த மசோதாக்களை வேண்டுமென்றே, விதிமுறைகளின்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பிலே போட்டு வைத்திருக்கும் என்று சொன்னால், அந்த மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற, உடனடியாக மத்திய அரசுக்கு உத்தரவிட, தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் உடனே ஒரு வழக்குத் தொடுக்க வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சந்தேகங்களை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். NEET தேர்வு குறித்து ஏற்கெனவே பலமுறை நாம் விவாதங்களெல்லாம் நடத்தியிருக்கிறோம். குறிப்பாக, அவர் கேட்டது குறித்து ஒரு சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குத்தான் காலை 9–00 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, M.B.B.S. படிப்பிற்கான rank பட்டியல் வெளியிடப்பட்டது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் மருத்துவப் படிப்பிற்கு அதிகமான இடங்கள் இருக்கின்றன. அதாவது நம்முடைய*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2018 ஜூன் 28

அரசு மருத்துவக் கல்லூரிகளிலுள்ள இடங்கள்; அண்ணாமலை பல்கலைக்கழகத்திலுள்ள இடங்கள்; தனியார் கல்லூரிகளில் இருக்கக்கூடிய அரசு இடங்கள் ஆகியவற்றையெல்லாம் சேர்த்தால், நமக்கு அதிகபட்சமாக 3,393 இடங்கள் இன்றைக்கு இருக்கின்றன. பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் நம்முடைய மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதிலும், நம்முடைய மாநிலத்தைச் சார்ந்திருப்பவர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதிலும் அரசு மிகத் தெளிவாக இருக்கிறது என்பதை நான் முதலில் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், கடந்த ஆண்டு எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான சேர்க்கை முடிந்தவுடன், பொதுவாக ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. அதாவது, வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், நீட் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் நம்முடைய மாநிலத்தில் சேர்க்கையைப் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. கடந்த ஆண்டும், அந்தப் பிரச்சினையை அரசு மிக உன்னிப்பாக, கவனமுடன் கையாண்டது. இந்த ஆண்டும் இதை எதிர்கொள்ளும் வகையில், தகவல் தொகுப்பு வெளியிட்டிருக்கிறோம். அந்த notification–ல் பல்வேறு ஷரத்துகளை சேர்த்திருக்கிறோம். எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்பிற்கான notification–ல், பக்கம் 7 மற்றும் 8–ல் மிகத் தெளிவாக பல்வேறு ஷரத்துக்களைக் கொண்டு வந்து, இன்றைக்கு விதிமுறைகளை மிகக் கடுமையாக்கியிருக்கிறோம். இந்த விதிமுறைகளை எப்படிக் கடுமையாக்கியிருக்கிறோம் என்பது குறித்து பக்கம் 7 மற்றும் 8–ல் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது, online–ல் இருக்கிறது; website–ல் இருக்கிறது. மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கிடைக்கும் வகையில் விதிகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இதர மாநிலங்களைச் சேர்ந்த யாரும் நம்முடைய மாநில ஒதுக்கீட்டில் ஒரு சீட்டைக்கூட பெறுவதற்கு விண்ணப்பிக்கவே முடியாது. இரண்டாவதாக, பிற மாநிலங்களிலுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு, இங்கு விண்ணப்பிக்க முடியும். ஏனெனில், சில மாநிலங்களில் dual application முறை இருக்கிறது. கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் எந்த மாநிலங்களில் வேண்டுமானாலும் apply செய்து கொள்ளலாம் என்ற ஒரு rule இருக்கிறது. அப்படியே இருந்தாலும்கூட, அவர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த யாராவது

2018 ஜூன் 28] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

ஒருவர் இருந்தால், தமிழ்நாட்டைச் சார்ந்தவர் தமிழ்நாட்டில் மட்டும்தான் விண்ணப்பிக்க முடியும் என்ற புதிய ஷரத்து இந்த ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக, ஏதேனும் ஒரு விண்ணப்பதாரர் வேறொரு மாநிலத்தில், அந்த மாநிலத்தைச் சார்ந்தவர் என்று விண்ணப்பித்திருந்தால், அவர் தமிழகத்திலும் விண்ணப்பித்திருந்தால், initial stage–லேயே விண்ணப்பத்தை screen செய்து, அந்த விண்ணப்பத்தையே நாம் நிராகரித்துவிடுவோம்; அவர் இன்னொரு மாநிலத்தில் விண்ணப்பித்திருந்தால். இதன் பிறகும் ஒருவேளை போலியான சான்றிதழ்களைக் காண்பித்து, மருத்துவப் படிப்பிற்கான சேர்க்கையைப் பெற யாரேனும் முயற்சி செய்வார்களேயானால், அவர்கள்மீது criminal action எடுத்து, prosecution செய்யக்கூடிய அளவுக்கு சட்டங்களைக் கடுமையாக்கி, காவல் துறையுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற தெளிவான விதிமுறைகளெல்லாம் இந்தத் தகவல் தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இருப்பிடச் சான்று குறித்தும் சொன்னார்கள். இருப்பிடச் சான்று குறித்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. உதாரணத்திற்கு, நம்முடைய தமிழ் மாநிலத்தைச் சார்ந்த ஒருவர் இந்திய இராணுவத்திலோ அல்லது மத்திய அரசின் பணியிலோ இருக்கிறார் என்றால், அவருடைய மகனோ, மகளோ 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை இங்கே படித்திருந்தால், அவர்கள் eligible என்ற விஷயத்தை, இதுபோன்ற சில விதிமுறைகளை, நமக்கு உயர் நீதிமன்றம் என்ன சொல்கிறதோ, உயர் நீதிமன்றத்தின் கருத்தின் அடிப்படையில், இருப்பிடச் சான்று வழங்குவதும் மிகவும் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. ஆக, எந்தவொரு சூழ்நிலையிலும், All India quota—வான 15 சதவிகிதத்தைத் தவிர, நம்முடைய மாநிலத்தில் பெறப்பட்ட எம்.பி.பி.எஸ். இடங்கள், நீட் தேர்வு இருந்தாலும்கூட, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், நீட் தேர்வு அடிப்படையில் ரேங்க் பட்டியல் வெளியிடும் நிலையில் நாம் இருந்தாலும்கூட, தமிழகத்தைச் சார்ந்தவரைத் தவிர, வேறு யாரேனும் ஒருவருக்கு எம்.பி.பி.எஸ். இடம் கிடைப்பதற்கு எந்த வழியும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே இல்லை என்பதை மிகத் தெளிவுபடக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. 12 ஷரத்துக்களை நாங்கள் சேர்த்திருக்கின்றோம். Notification–ல் போட்டிருக்கிறோம், online–ல் இருக்கிறது; website–ல் இருக்கிறது; transparent ஆக இருக்கிறது. இதையும் மீறி ஏதேனும் புகார்கள்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2018 ஜூன் 28

வந்தால்கூட, உடனடியாக அதை scrutinise செய்வதற்கும் அரசு தயாராகஇருக்கிறதுஎன்பதைஅன்போடுதெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தீர்மானம் குறித்து தெரிவித்தார்கள். தீர்மானம் ஏகமனதாக இந்த அவையில் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதி அவர்கள், அதை withheld செய்து வைத்திருக்கிறார்கள். அதற்கான விளக்கமும் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். இது உச்ச நீதிமன்ற Bench–ன் தீர்ப்பு. வரலாறுகள் நிறைய இருக்கின்றன. அதுகுறித்துப் பேசுவதற்கும் நான் தயாராக இருக்கிறேன், விவாதம் செய்வதற்கும் தயாராக இருக்கிறேன். இது Bench அடிப்படையில் வந்த தீர்ப்பு. இன்னும் அந்த மூல வழக்கை சட்டரீதியாக எதிர்கொள்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டரீதியாக அரசு அணுகுகிற முறைகளையெல்லாம் சொல்கிறார்; நான்

2018 ஜூன் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஏற்றுக்கொள்கிறேன், அதில் நான் கருத்து மாறுபாடு கொள்ள விரும்பவில்லை. நான் கேட்கிற கேள்வி, இதே அவையிலே, இரண்டு மசோதாக்கள், ஏகமனதாக, ஒருமனதாக 1–2–2017 அன்று நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எந்த நிலையில் இருக்கின்றன? அதுகுறித்து இந்த அரசு விளக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனாதிபதி அவர்கள், அதை* withheld *செய்து வைத்திருக்கிறார். அந்தத் தகவல் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. "ஏன்* withheld *செய்யப்பட்டுள்ளது?" என்று நம்முடைய அரசின் சார்பில் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

முற்பகல் 11–35

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனிவேல் தியாக ராஜன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். அமைச்சர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் தனியாக எல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால், நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடு) அதற்கெல்லாம் நீங்கள் என்னிடம் அனுமதி கேட்டுவிட்டு* raise *செய்ய வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை.* zero hour*–ல்* raise *செய்வது என்றால், அது என்னவென்பது எனக்குத் தெரிய வேண்டுமல்லவா! (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள்* English*–ல் கேட்டால்கூட அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு) இல்லை, அதற்கெல்லாம் என்னிடம் விவரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் நீங்கள் முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கிரி, உட்காருங்கள்.*